DIRECTOR OF MUNICIPAL ADMINISTRATION ✱ CHEPAUK, CHENNAI
10 AUG 2010

## சுருக்கம்

பணிக்குழு – பொள்ளாச்சி நகராட்சி – திருமதி ஆர். பார்வதி, தந்தை பெயர் இரங்கன் – தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி விதிகளில் விதி 7–ல் விதிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தளர்வு செய்தல் – வகுப்பு IV பெண் உதவியாளராக பணிநியமனம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (பத்தாண்டு) எண்.415** **நாள்:10.08.2010.**

படிக்க:

1. அரசாணை (பத்தாண்டு) எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 07.03.2008.
2. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்.26303/2006, நாள் 30.10.2009.
3. அரசாணை (பத்தாண்டு) எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை, நாள் 02.03.2010.
4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண். 38383/97/எச்3, நாள் 22.06.2010.

---

**ஆணை:–**

பொள்ளாச்சி நகராட்சியில் வகுப்பு IV பெண் பணியாளர் பணியிடத்திற்கு திருமதி ஆர். பார்வதி என்பவருக்கு பதிலாக மோசடி முறையில் திருமதி P. பார்வதி என்பவர் பணியமர்த்தப்பட்டதனை அடுத்து, திருமதி ஆர். பார்வதி அவர்கள் தொடுத்த வழக்கில் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் தனியருக்கு வகுப்பு–IV பணியிடத்தில் ஒரு பொருத்தமான வேலை வழங்கப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டபோது மனுதாரர், திருமதி ஆர். பார்வதிக்கு வயது 40 ஆகியுள்ளது தெரிய வந்ததால், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரைப்படி வயது வரம்பு சம்பந்தப்பட்ட தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி விதிகளில் விதி 6–னை தளர்வு செய்து பொள்ளாச்சி நகராட்சியில் தனியருக்கு வகுப்பு–IV நிலை பெண்பணியாளர் பணி நியமனம் வழங்க அனுமதித்தும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனையான உள்ளாட்சிகளில் புதிய பணிநியமனத்தால் பணியமைப்புச் செலவு அவற்றின் வருவாயில் 49 சதவிகிதத்திற்கு கூடுதலாக ஏற்படக்கூடாது என்ற நிபந்தனையிலிருந்து விலக்களித்தும், மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இந்திய மக்கள் தொகை திட்டம் – 5 மற்றும் ஓ.ஆர்.எஸ். திட்டத்தில் பணிபுரிந்த பணியாளர்களை நகராட்சி பணி விதிகளின்கீழ் கொண்டு வந்து மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உத்தரவிட்டுள்ளது என்றும், வகுப்பு IV பெண்பணியாளர் பணியிடத்தை தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 வகை 12–ல் உள்ள உதவியாளர் (குடும்ப நலம்) பணியிடத்துடன் சேர்த்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேற்கான் விதிகளின்படி உதவியாளர் பணியிடத்திற்குரிய கல்வித் தகுதி 8–ஆம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும், திருமதி ஆர். பார்வதி, தந்தை பெயர் இரங்கன் என்பவருக்கு தற்போது தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970–ன்கீழ் பெண் உதவியாளராக (Female attender) பணி நியமனம் வழங்க வேண்டிய நிலையில் இப்பணியிடத்திற்குரிய கல்வித் தகுதி 8–ஆம் வகுப்பை தனியர் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை என்பதால், திருமதி ஆர். பார்வதிக்கு பொள்ளாச்சி நகராட்சியில் வகுப்பு IV பெண் உதவியாளராக (Female Attender) பணி நியமனம் வழங்க தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி விதிகளில், விதி 7–னை (கல்வித் தகுதியினை) தளர்வு செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலித்தது. பரிசீலனைக்குப்பின், திருமதி ஆர். பார்வதிக்கு பொள்ளாச்சி நகராட்சியில் வகுப்பு IV பெண் உதவியாளராக (Female Attender) பணி நியமனம் வழங்க தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணி விதிகளில் விதி 7–ல் விதிக்கப்பட்ட கல்வித் தகுதியினை ஒரு சிறப்பு இனமாகக் கருதி தளர்வு செய்யலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அசோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
திருமதி R. பார்வதி, பொள்ளாச்சி நகராட்சி.
(வழி – நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
நகராட்சி ஆணையர், பொள்ளாச்சி.
இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை.

நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.